
# திராவிடத்தால் வாழ்கிறோம்

**1146**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## திராவிட மாடல் அரசு

**நீரை.மகேந்திரன்**

**163**

**`முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நம் முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி...**

# மூத்த குடிமக்கள் உறைவிடம்; மனிதம் போற்றும் மகத்தான முயற்சி!

குடும்ப அமைப்புகள் மாறிக்கொண்டிருக்கும் இந்தக் காலத்தில், தனிமையில் வாழும் முதியவர்களுக்குப் பாதுகாப்பான மற்றும் மரியாதையான வாழ்க்கைச் சூழலை உருவாக்க வேண்டியது நாகரிகச் சமூகத்தின் அவசியமாக உள்ளது. அந்த வகையில், சென்னை போன்ற மாநகரத்தின் வேகமான மாற்றங்களுக்கு நடுவில், மூத்த குடிமக்களை அரவணைக்கும் இடமாக திராவிட மாடல் அரசால் உருவாக்கப்பட்டதுதான் சென்னை கொளத்தூரில் அமைந்துள்ள ‘மூத்த குடிமக்கள்’ உறைவிடம்.

இந்து சமய அறநிலையத்துறை சார்பில், அமைக்கப்பட்டுள்ள இந்த இல்லத்தை, 2026 மார்ச் 03 ஆம் தேதி, நேரில் சென்று திறந்து வைத்து, மூத்த குடிமக்களுடன் உரையாடினார் முதலமைச்சர். இதன் மூலம், இந்து சமய அறநிலையத்துறை, திராவிட மாடல் ஆட்சியில் கோயில்களை நிர்வகிப்பது மட்டுமல்லாமல், அறப்பணிகளிலும் ஈடுபட்டு, மக்கள் சேவையின் மகத்துவத்தை உணர்த்தி வருகிறது.

2021 - 2022 நிதியாண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறை மானியக் கோரிக்கையின்போது, “சென்னை, பழனி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் மூத்த குடிமக்களைப் பேணிப் பாதுகாக்க, மூத்த குடிமக்களுக்கான உறைவிடங்கள் அனைத்து வசதிகளுடன் தொடங்கப்படும்” என்று அறிவிக்கப்பட்டது. இதையடுத்து திட்டப்பணிகள் இறுதி செய்யப்பட்டு, 2025-ஆம் ஆண்டு மே மாதம் 27-ஆம் தேதி திருக்கோயில்கள் சார்பில் சென்னையில் கொளத்தூர், பழனி மற்றும் பாளையங்கோட்டை ஆகிய இடங்களில் மூத்த குடிமக்கள் உறைவிடம் கட்டுவதற்கான கட்டுமானப் பணிகளைத் தொடங்கி வைத்தார் நம் முதலமைச்சர்.



முதற்கட்டமாக, சென்னையில் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வில்லிவாக்கம், தேவிபாலியம்மன் மற்றும் இளங்காளியம்மன் திருக் கோயில்கள் சார்பில், கொளத்தூர் ராஜாஜி நகரில்,ரூ. 11.08 கோடி மதிப்பில் இந்த இல்லம் கட்டப்பட்டது. 25,500 சதுர அடி பரப்பளவில் 75 மூத்த குடிமக்கள் பயன்பெறும் வகையில், கட்டப்பட்டுள்ளது.

### தனிச் சிறப்பான வசதிகள்

ஆண்கள் மற்றும் பெண்களுக்குத் தனித்தனி வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், தம்பதிகளுக்கும் தங்கும் வாய்ப்பு வழங்கப்படுகிறது. ஓர் அறையில், இரண்டு அல்லது மூன்று பேர் பகிர்ந்து தங்கும் வகையிலும் அமைக்கப்பட்டுள்ளன.

காற்றோட்டமான அறைகள், தனித்தனி படுக்கை, அலமாரி போன்ற அடிப்படை வசதிகளும், சுகாதாரமான சுற்றுப்புறம், சுத்தமான கழிப்பறை மற்றும் குளியலறைகள், தண்ணீர் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் அவர்களது அன்றாட வாழ்க்கையை இனிதாக்குகின்றன.

தினமும் தேநீர் மற்றும் மூன்று வேளை உணவு, சலவை, தினசரி பராமரிப்பு ஆகியவற்றுக்குப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதனால், மூத்த குடிமக்களால் தனியாக மேற்கொள்ள முடியாத அன்றாட வேலைகளும் எளிதாக்கப்பட்டுள்ளன.

தினமும், அடிப்படை மருத்துவப் பரிசோதனைகள் நடைபெறுவதுடன், தேவைக்கேற்ப மருத்துவர் வருகையும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அவசர சிகிச்சை தேவைகளுக்காக அருகிலுள்ள அரசு மருத்துவமனைகளுடன் இணைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.





இந்த உறைவிடம் உடல் நலத்துக்கும் அப்பாற்பட்டு, மனநலத்தையும் கவனத்தில் கொள்ளுகிறது. ‘நூலகம்’, ‘மனமகிழ் மன்றம்’, ‘ஆன்மிகச் செயல்பாடுகள்’, ‘தொலைக்காட்சி’ போன்ற பொழுதுபோக்கு வாய்ப்புகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் அவர்களின் தனிமை உணர்வு போக்கப்பட்டுள்ளது.

பொருளாதார ரீதியாகப் பின்தங்கியவர்கள் இந்த உறைவிடத்தில் சேர கட்டணமில்லை. இதற்கான அனைத்து செலவினங்களையும் தனியார் நிறுவனங்களின் சமூக பாதுகாப்பு நிதியின் மூலம் அறநிலையத் துறை மேற்கொள்கிறது. குடும்பத்தில் பராமரிக்க வசதி இல்லாத 60 வயதுக்கு மேற்பட்டவர்கள், குடும்ப ஆதரவு இல்லாதவர்கள் அல்லது தனியாக வாழும் நிலை உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. குறிப்பாக, மிகத் தீவிரமாக மருத்துவப் பராமரிப்பு தேவைப்படாதவர்கள் அனுமதிக்கப்படுகின்றனர்.

> **பாதுகாப்பு, மரியாதை, மனித உறவுகள் இந்த மூன்றையும் ஒருங்கிணைத்தன் மூலம் மூத்த குடிமக்களின் வாழ்க்கையை அமைதியாகவும் அர்த்தமுள்ளதாகவும் மாற்றியுள்ளது திராவிட மாடல் அரசு.**

இந்த திட்டத்தின் அடிப்படை நோக்கம், குடும்ப ஆதரவு இல்லாமல் வாழும் அல்லது தனிமையில் இருக்கும் முதியவர்களுக்குப் பாதுகாப்பான, கண்ணியமான வாழ்க்கைச் சூழலை வழங்குவது. குறிப்பாக நகர்ப்புறங்களில், பெற்றோரைப் பிரிந்து வேறு நகரங்களுக்கு அல்லது வெளிநாடுகளுக்குக் குடிபெயர்வதால், பல மூத்த குடிமக்கள் தனியாக வாழும் நிலை உருவாகியுள்ளது. அந்த இடைவெளியை நிரப்பும் முயற்சியாக இந்த உறைவிடம் செயல்படுகிறது.

### அரவணைப்பு

அறநிலையத் துறை சார்பில், ‘கல்வி நிறுவனங்கள்’, ‘பயிற்சிப் பள்ளிகள்’, ‘மனநலக் காப்பகம்’, ‘மருத்துவ மையம்’ ஆகியவை நடத்தப்பட்டு வரும் நிலையில், மூத்த குடிமக்களுக்கான உறைவிடங்கள் உருவாக்கப்பட்டதன் மூலம், சமூக நலத்தில் புதிய பாதையை உருவாக்கியுள்ளது தமிழ்நாடு. வசதி வாய்ப்புள்ளவர்கள் பெருந்தொகை கொடுத்து மூத்த குடிமக்கள் இல்லங்களில் தங்கும் நிலையில், வறிய நிலையில் உள்ளவர்களுக்குக் கரம் கொடுக்கும் திட்டமாக இந்த உறைவிட முயற்சி அமைந்துள்ளது.

மூத்த குடிமக்கள் ‘வாழ்வதற்கு இடம்’ என்ற நிலையில் இல்லாமல், அவர்கள் தங்கள் வீடுகளில் இருப்பதுபோன்ற உணர்வுடன் அரசு இந்த இல்லத்தை உருவாக்கியுள்ளது. பாதுகாப்பு, மரியாதை, மனித உறவுகள் இந்த மூன்றையும் ஒருங்கிணைத்தன் மூலம் மூத்த குடிமக்களின் வாழ்க்கையை அமைதியாகவும் அர்த்தமுள்ளதாகவும் மாற்றியுள்ளது திராவிட மாடல் அரசு. அது 2.0 ஆட்சியில் இன்னும் பலவாகத் தொடரும்.

...சாதனை தொடரும்

## புதிய அடிமைகளின் பொய் தொழில்!

திராவிட மாடல் ஆட்சியில், கடந்த 5 ஆண்டு காலத்தில், அரசுப்பள்ளிகளின் கட்டமைப்பை அடியோடு மாற்றியுள்ளது நம் அரசு. பள்ளிகளின் உட்கட்டமைப்பு, வகுப்பறைகள், ஆய்வகங்கள், கழிப்பறைகள், குடிநீர் வசதி போன்றவை மேம்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக, அனைத்துப் பள்ளிகளிலும் ஸ்மார்ட் வகுப்பறைகள் (Smart Classrooms) போன்றவற்றை உருவாக்கி, அரசுப்பள்ளிகளை நோக்கி மாணவர்களை ஈர்த்து வருகிறது. புதிய அரசுப்பள்ளிகளையும் தொடங்கியுள்ளது. அந்தப் புள்ளிவிவரங்களை மறுக்கும் வகையில், கடந்த அ.தி.மு.க ஆட்சிக்காலத்தில், 248 அரசுப்பள்ளிகள் தொடங்கப்பட்டது, தி.மு.க. ஆட்சியில் 208 பள்ளிகள் மூடப்பட்டன என்கிற வடிகட்டிய பொய்யைப் பேசி வருகின்றனர் சிலர். அதற்கு பதிலளிக்கும் வகையில், ‘உண்மை என்ன?’ என, தமிழ்நாட்டின் அரசுப்பள்ளிகளின் எண்ணிக்கை குறித்து 03.02.2025 அன்று நாடாளுமன்றத்தில், ஒன்றிய அரசு அதிகாரப்பூர்வமாக வழங்கிய புள்ளி விவரத்துடன் பதிவிட்டுள்ளார் கழகத்தின் செய்தித் தொடர்புத் துணைச் செயலாளர் சூர்யா கிருஷ்ணமூர்த்தி. அவரது பதிவிலிருந்து...

“2016 - 17 : 38,307

2020 - 21 : 37,589

நான்கே ஆண்டில் 718 அரசுப்பள்ளிகளை இழுத்து மூடியவர் எடப்பாடி பழனிசாமி.

2023 - 24 : 37,672

முதல் மூன்று ஆண்டுகளில் மட்டும் 83 புதிய அரசுப் பள்ளிகளைத் தொடங்கியவர் தலைவர் அவர்கள்.

பள்ளிகளின் எண்ணிக்கை மட்டுமல்ல, அ.தி.மு.க. ஆட்சியில் அரசுப்பள்ளி மாணவர்கள் உயர்கல்விச் சேர்க்கை விகிதம் 45%, திராவிட மாடல் ஆட்சியில் 75% என உயர்ந்துள்ளது. எண்ணிக்கையிலும், தரத்திலும் மாபெரும் கல்விப் புரட்சியை நிகழ்த்துகிறது திராவிட மாடல் அரசு” எனப் பதிவிட்டுள்ளார். பொய்களையும், வதந்திகளையும் பரப்புவதில், பா.ஜ.க.வினரிடத்தில் பாடம் கற்றுக்கொண்ட புதிய அடிமைகளாக அ.தி.மு.க.வினர் மக்கள் மத்தியில் அம்பலப்பட்டுள்ளனர்.

## ஃப்ளாஷ்பேக்



### கலைஞர் 90, ‘கவிதைகள் 70’



மா.சுந்தரேசன்

2013-ஆம் ஆண்டு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 90-வது பிறந்த நாளில், தமிழ்நாடு முழுவதும் 90 கவிஞர்களைத் திரட்டி, சென்னையில் ‘கலைஞர் 90’ என மிகச் சிறப்பான விழா எடுத்தார் கவிப்பேரரசு வைரமுத்து. நிகழ்ச்சியில் கவிதை வாசித்த நான், கலைஞர் குறித்து ‘முரசொலி’யில் எழுதி இருந்த 70 கவிதைகளைத் திரட்டி நூலாக்கி, அவர் கையில் வழங்கினேன். அதை ஒவ்வொரு பக்கமாகப் புரட்டி வாசித்து மகிழ்ந்தார் தலைவர். கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் ‘ஞானபீட விருது’ பெற்றுள்ள இந்த நேரத்தில், இந்தப் படத்தைப் பதிவு செய்வது சிறப்புக்குரியது..

**- கவிஞர் சாவல்பூண்டி மா.சுந்தரேசன்,
மாவட்ட முன்னாள் துணைச் செயலாளர்,
தலைமைக் கழகப் பேச்சாளர்,
திருவண்ணாமலை..**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### விவசாயிகளுக்கு மின்சாரம்!

1990-ஆம் ஆண்டு, கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது, செப்டம்பர் மாதம் முதல் நாள், விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் அளிக்கும் திட்டத்தைத் தொடங்கிவைத்தார். ஆனால், ஜெயலலிதா ஆட்சியில், 1992-ஆம் ஆண்டில் அந்தத் திட்டத்தை ரத்து செய்ய அரசாணை வெளியிடப்பட்டபோது, தமிழ்நாடு தழுவிய போராட்டம் வெடித்தது. இறுதியில், ‘மக்கள் கோரிக்கைகளுக்குப் பணிந்து இலவச மின்சாரத் திட்டம் தொடரும்’ என அறிவிக்கப்பட்டது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131